# சித்த மருத்துவர்
## பட்டப்படிப்பான வரலாறு

மரு. கோ.பாரத்குமார்.
எம்.டி.(சித்தா) முதலாமாண்டு,
குணபாடம் துறை.

சித்தர்களால் படைக்கப்பட்ட சித்த மருத்துவமானது. ஓலைச்சுவடிகளிலும். கைமுறையாகவும் பழக்கத்தில் இருந்து வந்தது. இன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தால் இளங்கலை பட்டபடிப்பாகவும் (B.S.M.S.), முதுகலை பட்டபடிப்பாகவும் (M.D.(S)) பயிற்றுவிக்கப்பட்டு மருத்துவ சேவை செய்து சான்றிதழையும் அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு, இம்மருத்துவர்களை தமிழக அரசு மருத்துவமனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அரசு மருத்துவராக பணியமர்த்தி. மக்கள் சேவையில் ஈடுபடச்செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சித்த மருத்துவம் சிறப்பான முறையில் முன்னேறி வருகிறது. அதற்குச் சான்றாக இந்த ஆண்டு மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் (NIS) சென்னை தாம்பரத்தில் நிறுவியுள்ளது. இத்தகைய முன்னேற்ற பாதையில் செல்லும் சித்த மருத்துவத்தின் அதிகாரபூர்வமான வளர்ச்சியையும், அரசியல் மாற்றத்தில் சித்த மருத்துவத்தின் நிலையையும். ஆரம்ப காலத்தில் சித்த மருத்துவம் தமிழகத்தில் வேரூன்ற காரணமாக இருந்தவர்களை பற்றியும் அறிந்துகொள்வது சித்த மருத்துவர்களின் கடமையாகும்.

### சிங்கள நாட்டில் சித்த மருத்துவ வளர்ச்சி:-

பல நூற்றாண்டுகளுக்கு முன் சிங்கள நாட்டையாண்ட இரு மன்னர்கள் சித்த மருத்துவ முறைகளை ஏடுகளில் பதிப்பித்துள்ளனர். இந்த மருத்துவ நூல்கள் ஜகராஜ சேகரம், பரராஜசேகரம் என அழைக்கப்படுகிறது இருமருத்துவ நூல்கள் இன்றளவிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நூல்கள் சித்த மருத்துவம் சிங்களத்தில் வேரூன்ற அடிப்படையாக திகழ்கின்றன.

### சரபோஜி மன்னர் காலத்தில் சித்த மருத்துவ வளர்ச்சி:-

தஞ்சையையாண்ட சரபோஜி மன்னரின் காலத்தில் நம் நாட்டு மருத்துவ முறைகளுக்கெல்லாம் ஆதரவு கிடைத்தது. அவருடைய காலத்தில் ஆங்காங்கு கேட்பாரற்று கிடந்த மருத்துவம், கலை, இலக்கியம், வரலாறு, முதலியவை பற்றிய ஓலைச்சுவடிகள் யாவும் ஒருங்குதிரட்டப்பட்டு ஓர் ஏற்றமான இடத்தில் காப்பாக வைக்கப்பட்டன. சித்த மருத்துவர்களை ஊக்குவித்து மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. திரட்டிய ஏடுகளை வரிசைப்படுத்தி ஆய்வு செய்து பல நூல்களை எழுதவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. மருந்து செய் சாலைகளை நிறுவி அனைத்து மருந்துகளையும் உற்பத்தி செய்யும் பணிக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. சித்த மருத்துவ முறைகளில் பற்பல அரிய பெரிய மருந்துகள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டுத் தக்க மருத்துவர் மூலமாக மக்களுக்குப் பயன்படும் வண்ணம் முன்னனிக்கு கொண்டுவரப்பட்டன. இவ்வாறு இச்சிற்றரசரின் ஆதரவு சிலகாலம் நீடித்தது. அம்மன்னர் மறைவுக்கு பின் ஆட்சியைக் கைப்பற்றியர்களின் ஆதரவு குறைந்தது.

### ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சித்த மருத்துவத்தின் வளர்ச்சி:-

ஆங்கிலேயர் ஆட்சியில் பழைய சென்னை இராசதாணி என்னும் பெயரில் தெலுங்கு, கருநாடக, மலையாள நாடுகளின் பகுதிகள் யாவும் ஒன்றி ஒரே இராச்சியமாக இருந்தது. அப்போது சென்னையில் நீதிக்கட்சி ஆட்சி செலுத்திய காலத்தில் நாட்டுபற்றும், நாட்டு மருத்துவக் கலைகளில் ஈடுபாடும் கொண்ட பனகல் அரசர் முதல் மந்திரியாகத் திகழ்ந்தார். அவருடைய பெருமுயற்சியாலும்,, சர் முகம்மது உஸ்மான் என்னும் பெருந்தகையாரின் அருந்துணையாலும், காப்டன் ஜீ. சீனிவாசமூர்த்தி அவர்களின் அயரா

உழைப்பாலும் சென்னையில் அரசாங்கத்தின் ஆதரவில் 1924 ஆம் ஆண்டு ஒரு நாட்டு மருத்துவக் கல்லூரி தொடங்கத் திட்டமிட்டு, ஒரு நாட்டு மருத்துவப் பள்ளி தொடங்கப்பட்டது. அப்பள்ளியில் சித்த, ஆயுர்வேதா, யூனானி மருத்துவமுறைகள் கற்பிக்கப்பட்டு வந்தன. வைத்திய ரத்னா க.ச. முருகேச முதலியார் அவர்களின் பெருமுயற்சியால் பல எதிர்ப்புகளுக்கிடையே சித்தமருத்தவப் பிரிவு நிலைபெறச் செய்யபெற்றது என்பது மறுக்க முடியாத உண்மை. பெருமுயற்சியால் பல எதிர்ப்புகளுக்கிடையே சித்தமருத்தவப் பிரிவு நிலைபெறச் செய்யபெற்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

**பள்ளியின் சிறப்பு:**

அப்பள்ளி தொடங்கிய நாளில் வேறு எந்த மாகாணத்திலும் அத்தகைய சிறந்த பாடத் திட்டங்களுடன் கற்பிக்கும் நாட்டு மருத்துவப்பள்ளி அரசாங்கத்தின் ஆதரவில் ஏற்படுத்தப்படவில்லை என்பதை நினைவிலிருத்த வேண்டும். அதன் பின் பல்லாண்டுகளுக்குப் பின்பு மற்ற மாகாணங்களில் ஆயுர்வேத, யுனானிக் கல்லூரிகள் அரசாங்கத்தின் ஆதரவில் தொடங்கப்பட்டுத் தற்போது மிகவும் முன்னேறியுள்ளன. இப்பள்ளியானது இருந்த இடம் தற்போதுள்ள சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனையாகும்.

**சித்த மருத்துவத்துக்கு - சோதனை காலம்:-**

1937-38 ஆம் ஆண்டு சென்னை இராசதானியில் ஏற்பட்ட காங்கிரஸ் மந்திரிசபையில் டி.எஸ்.எஸ். ராஜன் மருத்துவத் துறை அமைச்சராக இருந்தார். அவர் ஆங்கில மருத்துவமுறை பயின்றோருள் பள்ளிப்படிப்பு, கல்லூரிப்படிப்பு என இருவகையான நிலை கூடாதென்று பள்ளிப் படிப்பு நிறுத்தப்பட்டது. அதே சமயம் இந்திய மருத்துவப்பள்ளியின் பாடத்திட்டம் மிக்க பற்றாக்குறையானது என்றும், தகுதியற்றதென்றும், நாட்டு மருத்துவ முறைகள்யாவும் விஞ்ஞான அடிப்படையில் இல்லாதவை, தற்காலத்திற்கு தேவையற்றவை, முன்னேற்றம் சிறிதும் இல்லாதவை என்றும் குறை கூறி, அவ்வகை மருத்துவத்தைப் போதிக்கும் பள்ளிக்கூடம் இருப்பது மனிதவினத்துக்கு எள்ளளவும் பயனற்றது என்றும் குறைகூறி அந்தப் பள்ளியை மூடத் திட்டமிட்டார்.

**காப்டன். ஜி. சீனிவாச மூர்த்தியின் பங்கு:**

இத்தகைய சூழ்நிலையில் நாட்டுமருத்துவர் பள்ளியின் முதல்வராக இருந்தவர் காப்டன் ஜி.சீனிவாசமூர்த்தி ஆவார். அவர் தக்க சான்றுகள் மூலம் மருத்துவப்பள்ளியின் பாடத்திட்டத்தின் நேர்மையையும். போதிய தன்மையையும் அக் கல்லூரியில் பயின்றவர்களுடைய சேவைத் திறனையும் பற்பல எடுத்தக்காட்டுகள் மூலம் விளக்கிக் கூறி நாட்டு மருத்துவப்பள்ளியை நிலைக்கச்செய்தார். பின்னர் இந்த பள்ளி ஒரே நிலையில் யாதொரு மேம்பாடும் குறைபாடுமின்றி 1946 வரை நடந்து வந்தது.

**சுதந்திரத்திற்கு பின் சித்த மருத்துவ வளர்ச்சி:**

1947-ல் நாட்டுக்கு உரிமை கிடைத்த பிறகு. திரு.டி.பிரகாசம் முதலமைச்சராகத் திகழ்ந்த போது, நாட்டு மருத்துவ பள்ளியானது கல்லூரித் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. அக்கல்லூரி எட்டு ஆண்டுகாலம் நடந்துவந்தது. மீண்டும் ஒரு காங்கிரஸ் மந்திரி சபையின் ஆட்சிக்காலத்தில் 1955-ஆம் ஆண்டு நிரந்தரமாக மூடப்பட்டது. அந்தக் காலத்தில் பொதுமக்களும், மருத்துவச் சங்கங்களும் தென்னாட்டில் பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் கூடி அரசினரிடம் இந்திய மருத்துவக் கல்லூரியின் தேவையை வலியுறுத்தித் தீர்மானங்கள் சமர்பித்தும், தக்க சான்றோர்களின் துணையுடன் அரசாங்கத்தார்களைச் சந்தித்துப் பரிந்துரை வழங்கியும் வந்தனர்.

**பாளையங்கோட்டையில் சித்த மருத்துவ கல்லூரி:-**

பல்வேறு போராட்டங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு பிறகு, பாளையங்கோட்டையில் இந்திய மருத்துவக் கல்லூரி 1964-ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. அவ்வாறு தொடங்கிய கல்லூரியில் சித்த, ஆயுர்வேத, யுனானி ஆகிய மூன்று மருத்துவ முறைகளையும் கற்பிக்கும்

நோக்குடன் தான் அது தொடங்கப்பட்டது. ஆனால் பல்கலைக்கழகம் வகுத்தபடி தகுதியுடைய மாணவர்கள் ஆயுர்வேத, யுனானி, மருத்துவத் துறைகளைப் பயில மனு செய்யவில்லை, என்ற காரணத்தால் சித்த மருத்துவ முறை மட்டுமே கற்பிக்கப்பட்டு வரப்படுகிறது. எனவே அக்கல்லூரிக்கு அரசினர் சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை என பெயரிலாயிற்று. இக்கல்லூரி பட்டமேற்படிப்பு துறையில் (M.D.(S)) துவங்கப்பட்டு. 6 பாடப்பிரிவுகளை நடத்திவருகின்றனர்.

## அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை துவங்கிய வரலாறு:

1955-ல் நாட்டு மருத்துவ கல்லூரி மூடப்பட்டாலும், இந்திய மருத்துவ பிரிவானது சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனையில் செயல்பட்டுவந்தது. இந்திய மருத்துவத்துக்கு என தனிமருத்துவமனையின் அவசியத்தை உணர்ந்த அப்போதை முதலமைச்சர் திரு. மு.கருணாநிதி அவர்களும், அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் தனி மருத்துவமனை, கட்ட பரிந்துறை செய்தனர். எனவே 1972-ம் ஆண்டு சென்னை அரும்பாக்கத்தில் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை கட்டிமுடிக்கப்பட்டது. கீழ்பாக்கம் மருத்துவமனையிலிருந்த இந்திய மருத்துவ பிரிவு முற்றிலுமாக அரும்பாக்கம், அண்ணா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இன்றளவிலும் தமிழகத்தில் இந்திய மருத்துவமனைகளுக்கு. தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இம்மருத்துவமனையிலேயே பயிற்சி பெறுகின்றனர்.

## பழநியில் அரசு சித்த மருத்துவ கல்லூரி துவக்கம்:

1985-ம் ஆண்டு இயற்கை சூழல் மிக்க பழநியில் ஒரு அரசு சித்த மருத்துவக் கல்லூரியை நிறுவ வேண்டும் என்று அரசு திட்டமிட்டு செயல்படுத்தியது. அக்கல்லூரி வருவதற்கு காரணமாயிருந்தது அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களே. அக்கல்லூரி 1993-ஆம் ஆண்டு மே வரை தொடர்ந்து செயல்பட்டது. அக்கல்லூரி பழநியில் இருந்ததால், எத்தகைய முன்னேற்றமும் இன்றி இருந்தது. இதனால், சித்த மருத்துவ மாணவர்களும் மருத்துவர்களும் தொடர் போராட்டங்களையும் பரிந்துரைகளையும் செய்துவந்தனர். இதன் காரணமாக. இக்கல்லூரி சென்னைக்கு மாற்றப்பட்டது.

## சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி:

பழநி கல்லூரியில் ஏற்பட்ட தொடர் போராட்டம் மற்றும் பரிந்துரைகளின் விளைவாக 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல்வர் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் திரு. முத்துசாமி அவர்கள் சுகாதாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்தபோது, அவர்களது அரும்பணியில் அக்கல்லூரி சென்னைக்கு மாற்றப்பட்டது. சென்னை அரசினர் சித்த மருத்துவ கல்லூரியில் 1998-ம ஆண்டு பட்டமேற்படிப்பு துறை (M.D.(S) துறை துவங்கப்பட்டு, தற்போது குணபாடம் மற்றும் மருத்துவம் என்ற இரண்டு பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டுவருகின்றன. சென்னை அரசு சித்த மருத்துவ கல்லூரி துவங்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவுற்ற வேளையில், இக்கல்லூரி முன்னேற்றத்துக்காக, மத்திய சுகாதாரத்துறை ரூ.3 கோடியை வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் அணு அணுவாக வளர்ச்சியடைந்துள்ள நமது சித்த மருத்துவமானது தற்போது இமாலய வளர்ச்சியடைந்துள்ளது. காரணம் சித்த மருந்துகளால் தேய்வு நோய் (Aids) மற்றும் புற்றுநோய் (Cancer) போன்ற பெரும்பிணிகள் கூட நன் முறையில் கட்டுப்பட்டு வருகின்றன. எனவே தமிழ்மருத்துவமானது அனைத்துத்தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே சித்த மருத்துவத்துக்கென தனிப் பல்கலைக்கழகமும் தனி இயக்குநரகமும் துவங்கும் நாள் இன்னும் வெகுதொலைவில் இல்லை.